# தற்கால நடைமுறையிலுள்ள நாணயமாற்று முறைமை: ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்

Azhar.M.A[1] & Sajith. S.A[2]

abuhamthiazhar@gmail.com

Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச்சுருக்கம்** : நாணயமாற்று முறையானது இன்று பரவலாக எல்லோராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்போது குறித்த ஒரு நாணயமானது விற்பனைக்கு ஒரு விலைக்கும் கொள்வனவிற்கு ஒரு விலைக்கும் பரிமாறப்படுவதனை பரவலாக காணலாம். இந்த முறைமையின் அடிப்படையில் பணமானது ஒரு வியாபாரப் பொருளாக கையாளப்படுவதை நாம் அவதானிக்கின்றோம். அதனை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும்போது அதன் மூலம் இலாபமீட்டும் செயற்பாடு இங்கு நடைபெறுகின்றது. இவ்வாறு பயன்படுத்துவது இஸ்லாமிய அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டதா அல்லது தடுக்கப்பட்டதா என்பதை வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இதனடிப்படையில் தற்கால நாணயமாற்று நடைமுறை சம்பந்தமான விடயங்களை உரிய வங்கி, நாணயமாற்று நிலையங்களின் முகாமையாளர்களை நேர்காணல் செய்ததன் மூலம் முதல்நிலை தரவுகள் பெறப்பட்டதுடன் , இது சம்பந்தமான இஸ்லாமிய அடிப்படை ஆதாரங்கள் இரண்டாம்நிலை தரவுகளாக இஸ்லாமிய பிக்ஹு துறை நூல்கள் , உஸூல் நூல்கள் , ஹதீஸ் கிரந்தங்கள் மற்றும் குர்ஆன் வசனங்களில் இருந்து திரட்டப்பட்டு அவை விவரணம் செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விமர்சிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தற்காலத்தில் நடைமுறையில் உள்ள நாணய மாற்று முறைமை அதில் காணப்படும் வட்டி (ரிபா-அல்பள்ல்) காரணத்தால் இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு முரணானதாகும். எனவே குறித்த நாணயங்களுக்கு இடையிலான பரிமாற்று வீதத்தை நிலையான ஒரு பெறுமானமாக குறிப்பிட்டு விற்பனை மற்றும் கொள்வனவின் போதும் ஒரே பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பரிமாற்றம் இடம் பெறுவதன் மூலம் இஸ்லாமிய வரையறைகளின் அடிப்படையில் ஆகுமானதாக அமைக்க முடிவதோடு, சேவைக் கட்டண அடிப்படையில் ஒரு பெறுமதியை நிர்ணயம் செய்வதன் மூலம் குறித்த நிறுவனங்கள் தமது இலாபத்தை ஈட்ட முடியும் என்பதனையும் நாம் இந்த ஆய்விலிருந்து முன்வைக்கின்றோம்.

**திறவுச் சொற்கள் :** நாணயமாற்று, இஸ்லாமியக் கண்ணோட்டம், தற்கால நடைமுறை, ரிபா-அல்பள்ல்.

## ஆய்வு அறிமுகம்

இன்றைய காலகட்டத்தில் நாடுகளுக்கிடையிலான தொடர்புகளும், பரிவர்த்தனைகளும், வியாபார நடவடிக்கைகளும், வெளிநாடுகளில் வேலை செய்யும் கலாச்சாரமும், மிகவும் மேலோங்கி காணப்படுவதை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான அனைத்து செயல்பாடுகளுக்கும் அடிப்படையாகவும் மிகவும் பிரதான ஒரு விடயமாகவும் இந்த நாணயமாற்று முறைமை காணப்படுவது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஒரு

குறித்த நாட்டு நாணயத்தை ஒருவர் வேறொரு நாட்டு நாணயமாக மாற்ற எத்தனிக்கும் போது ஒன்றில் அவர் ஒரு வங்கியையோ அல்லது நாணயமாற்று நிலையங்களையோ நாட வேண்டி ஏற்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அவர் ஒரு குறித்த நாணயத்தை விற்பனை செய்யும் போது ஒரு விலைக்கும் கொள்வனவு செய்யும் போது இன்னுமொரு விலைக்கும் கொள்வனவு செய்யக்கூடிய ஒரு நடைமுறையை நாம் காணலாம். இந்த நடைமுறையின் அடிப்படையில் பணம் ஒரு வியாபார பண்டத்தை போன்று கையாளப்படுகின்றது. இது சம்பந்தமாக இஸ்லாமிய நாணயக் கொள்கை என்ன கூறுகின்றது?, இந்த செயற்பாடு இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களுக்கு ஏற்புடையதா? எனும் சந்தேகம் எழுகின்றது. இது சம்பந்தமாகவே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வுப்பிரச்சினை**

தற்கால நாணயமாற்று முறைமையை அவதானிக்கும் போது குறித்த ஒரு நாணயத்தின் பெறுமதியானது விற்பனைக்கும் கொள்வனவிற்கும் வேறுவேறாக காணப்படுவதனை நாம் காணலாம். இவ்வாறு காணப்படுவது இஸ்லாமிய நாணயக் கொள்கைக்கு எதிரானதா அல்லது ஏற்புடையதா என்பதை இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு தீர்வு காண்பதற்காகவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வின் அடிப்படையாகவும் பின்னணியாகவும் அமைந்தது ஓர் இஸ்லாமிய பாமரனிடம் இருந்து வந்த தொலைபேசி அழைப்பாகும். அதில் அவர் இந்த விடயம் சம்பந்தமான மார்க்க தீர்ப்பை வினவியிருந்தார். இதிலிருந்தே இந்த ஆய்வுக்கான ஆரம்பம் உருவாகி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த சம்பவம் பிரதானமாக தற்காலத்தில் மீள்வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

- தற்கால நாணயமாற்று நடைமுறையின் அடிப்படைகளைக் கண்டறிதல்.
- தற்கால நாணயமாற்று முறையில் காணப்படும் இஸ்லாமிய நாணயக் கொள்கைக்கு எதிரான விடயங்களைக் கண்டறிதல்.
- இஸ்லாமிய அடிப்படையில் நாணயமாற்று முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான ஆய்வு முறையிலான இந்தக் கற்கை முதலாம் , இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். தற்கால நாணயமாற்று நடைமுறை பற்றிய விடயங்கள் வங்கிகள் மற்றும் நாணயமாற்று நிலையங்களின் முகாமையாளர்கள் நால்வரின் நேர்காணல்களின் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்பட்டதுடன் , ஏனைய இஸ்லாமிய கோட்பாட்டு அமைப்புகள் இரண்டாம் நிலை தரவுகளாக பிக்ஹு கலை மற்றும் உஸூல் கலை நூற்கள் , ஹதீஸ் கிரந்தங்கள், அல்குர்ஆன் என்பவற்றில் இருந்து பெறப்பட்டு ஆய்விற்காக பயன்படுத்தப்பட்டன.


ISBN 978-624-5736-14-0

**இலக்கிய மீளாய்வு**

ஆரம்ப காலத்தில் அரேபிய தீனார், பைசாந்திய நாணயம் மற்றும் திர்ஹாம், பாரசீக நாணயத்தைப் பயன்படுத்தியது (அல்-மார்டு, 1938,இப்னு கல்தான், 1336 ). இஸ்லாம் வந்தபோது, மக்காவில் தற்போதைய எடையை நபி மாற்றவில்லை. திர்ஹாம் மற்றும் டானாரை பணமாகப் பயன்படுத்த அவர் ஒப்புதல் அளித்தார் (பல்துரா, 1956,அல்-மக்ராஸா, 1913).

இஸ்லாமிய ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் பலவிதமான திர்ஹாம்கள் பயன்படுத்தப்பட்டன, அவை மதிப்பு மற்றும் எடையில் வேறுபடுகின்றன (அல்-மக்ராஸா, 1913, டோரா, 1948). பாக்லே திர்ஹாம் (அதைத் தயாரித்த நபரின் பெயரிடப்பட்டது) 'உமர் இப்னுல்-கத்தாப் அவர்களின் ஆணைப்படி அச்சிடப்பட்டது. இது உண்மையில் 20 காரட் எடையுள்ளதாக இருந்தது. அபாரி திர்ஹாம் (ஈரானின் வடக்கே உள்ள தபரிஸ்தானில் இருந்து), 15 ஏஹெச் ஆண்டில் கோலிட் இப்னுல்-வாலட் என்பவரால் மீட்கப்பட்டது, 10 காரட் எடை இருந்தன. ஜுராகே திர்ஹாம் 12 காரட் எடையுடன் இருந்தது. இந்த மூன்றைத் தவிர, பிற திர்ஹாம்களும் பயன்பாட்டில் இருந்தன: யமனா மற்றும் மக்ரிப் திர்ஹம் அவற்றுள் அடங்கும்(அல்-எம் வார்டு, 1938).

மஹ்மூத் முஹம்மத் தவ்பீக் றமளான், 2011 "நாணயத்தாள்களில் வகைகள் வேறுபட்டிருப்பது தொடர்பான ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் நாணயத்தாள்கள் அதன் ஒவ்வொரு பெயரிற்கும் ஏற்ப வகைகளில் வித்தியாசம் உள்ளதா? அல்லது அவை அனைத்தும் நாணயத்தாள்கள் எனும் ஒரே வகையைச் சேர்ந்ததா? என்பது தொடர்பாக ஆய்வு செய்து கூறியுள்ளார். அப்துல்லாஹ் இப்னு பையாஹ், 1986 "நாணயத்தாள்களில் சட்டங்களும் அதன் பெறுமதி" எனும் தலைப்பில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

**கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடல்களும் :**

**தற்கால நாணயமாற்று முறைமையின் அடிப்படைகள்**

- இலங்கையைப் பொறுத்தவரையில் அதனுடைய நாணய பெறுமதி திறந்த சந்தை அடிப்படையில் குறித்த நாளில் நாணயத்திற்கான கேள்வி, நிரம்பலை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.
- குறித்த ஒரு தினத்தில் இலங்கை நாணயத்திற்கு எதிரான ஏனைய நாணயங்களின் பெறுமதியை காலை 9.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கி அறிவிக்கும். இதன்போது நாணயங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதிகள் அறிவிக்கப்படும்.
- இலங்கையில் உள்ள வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற நாணயமாற்று நிலையங்கள் இதனை அடிப்படையாகக் கொண்டு தமது பணப்பரிமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும்.
- விற்பனை மற்றும் கொள்வனவுக்கு இடையிலான பெறுமதி இலாபமாக கொள்ளப்படும்.


ISBN 978-624-5736-14-0

**தற்கால நாணயமாற்று முறைமை வட்டியுடன் தொடர்பு பட்டதாக காணப்படுகின்றது**

குறித்த ஒரு நாணயம் விற்பனைக்கும் கொள்வனவிற்கும் வெவ்வேறு பெறுமதிகளை கொண்டிருப்பது இஸ்லாமிய நாணயக்கொள்கைக்கு மாற்றமானதாகும். தற்காலத்தில் உள்ள மார்க்க அறிஞர்கள் பலர் இந்தக் கருத்தை முன்வைக்கிறார்கள். அதில் மிகவும் பிரபல்யமானவர் முஹம்மத் சஈத் ரமலான் அல்-பூதி ஆவார்கள்.

இவ்வாறு இடம்பெறுவது ரிபா-அல்பள்லை உருவாக்குகின்றது. இதனை பின்வரும் இஸ்லாமிய மூலாதாரங்களின் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

‘‘நிச்சயம் வியாபாரம் வட்டியைப் போன்றதே’’

‘‘அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி வட்டியை ஹராமாக்கி இருக்கிறான்’’

(அல் பகரா:275)

மேற்குறிப்பிடப்பட்ட இந்த குர்ஆன் வசனம் வியாபாரம் மற்றும் வட்டி ஆகியன சில வேளைகளில் பார்ப்பதற்கு ஒரே போன்று காணப்பட்டாலும் அவை இரண்டின் அடிப்படைகளும் வித்தியாசப்படுவதோடு அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வட்டியை தடுத்துள்ளான் என்பதனை விளக்கி நிற்கின்றது.

ரிபா- அல் பள்ல் எனப்படுவது குறிப்பட்ட ஒரே வகையான பொருட்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் போது மேலதிகமாக கைமாறப்படுவதனை குறித்து நிற்கின்றது. (வஹ்பதுஸ் ஸுஹைலி,2006)

இதனை பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் உபாதா இப்னு ஸாமித் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : தங்கத்திற்கு தங்கம், வெள்ளிக்கு வெள்ளி,கோதுமைக்கு கோதுமை, பார்லிக்கு பார்லி , ஈச்சம் பழத்துக்கு ஈச்சம்பழம், உப்பிற்கு உப்பு பரிமாற்றப்படும் போது ஒரே வகை, ஒரே அளவு, உடனுக்குடன் கைமாற்றப்பட வேண்டும். இதன் வகைகள் வித்தியாசப்படும் போது நீங்கள் விரும்பியவாறு விற்றுக் கொள்ளுங்கள். (முஸ்லிம்:1587)

இந்த ஹதீஸில் குறிப்பிடப்படும் தங்கம் வெள்ளி என்பன நபி (ஸல்) அவர்களின்காலத்தில் நாணயங்களாக அதாவது பொருட்களின் பெறுமதி தீர்மானிக்கும் ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டன. எனவே தற்காலத்தில் அச்சிடப்பட்டுள்ள நாணயங்கள் அதற்காக பயன்படுத்தப்படுவதால் இந்த குறித்த சட்டம் தற்கால நாணயங்களிலும் கியாஸ் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலே உள்ள ஹதீஸில் கூறப்பட்ட வாசகமான ‘‘இவைகளின் வகைகள் மாறுபடும்போது உங்களுக்கு விரும்பியவாறு விற்றுக் கொள்ளுங்கள்’’ என்பதன் மூலம் ஒரு சிலர் நாணயங்களின் வகைகள் வேறுபடும் போதும் நாம் அதனை விரும்பியவாறு பயன்படுத்தலாம் என விவாதிக்கின்றனர். ஆனால் அது பிழையான வாதமாகும். ஏனெனில் தற்கால நாணயங்களின் பெயர்கள் மாறுபட்டதாக


ISBN 978-624-5736-14-0

இருந்தாலும் அவை அனைத்தும் ''நாணயத்தாள்கள்'' எனும் ஒரு வகையை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது (நிழால் அல் ஸிஆர்,2010).

இந்தக் கருத்தை கூறுபவர்கள் சொல்லும் ஆதாரங்களை ஒவ்வொன்றாக நோக்குவோம். முதலாவதாக இஸ்லாத்தின் பிக்ஃ. துறையில் ''முகாசா'' எனப்படும் இருவருக்கிடையில் ஒரே அளவான கடன் காணப்படும்போது அதனை நிவர்த்தி செய்யும் முறையாகும். பொதுவாக இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்த முடிவாக ஏற்றுக் கொண்ட விடயம் என்னவென்றால் இவ்வாறு இருவருக்கிடையில் இருக்கும் கடன் வேறுபட்ட நாணய வகைகளாக இருந்தாலும் அவற்றுக்கு இடையிலான நாணயமாற்று பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அந்த கடனை இருவரும் இல்லாமல் செய்ய முடியும் என்பதாகும். இவ்வாறு அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பது அனைத்துவிதமான நாணயங்களும் ''நாணயத்தாள்கள'' எனும் ஒரே அடிப்படை வகையின் கீழ் உள்ளடக்கப்படுகின்றது என்பதனையே காட்டுகின்றது. அவைகள் வேறு வேறு நாடுகளின் மூலமாக அச்சிடப்பட்டு வேறுவேறு பெருமதிகளைக் கொண்டதாக இருந்தாலும் சரியே. ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய காலத்தில் பலவகையான தங்க நாணயங்கள் பல அரசினால் அச்சிடப்பட்ட போதும், அவைகளின் நிறைகள் மற்றும் பெறுமதி வித்தியாசப்பட்டு இருந்தபோதும் அவை அனைத்தும் தங்கம் எனும் ஒரு வகையை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டன. மாறாக ஒவ்வொரு நாட்டிலும் அச்சிடப்பட்ட ஒவ்வொரு வகையான தங்க நாணயங்களும் ஒவ்வொரு மாறுபட்ட வகைகளாக நோக்கப்படவில்லை (பத்ஹுல் கடீர், அல்-முஃனீ, அல்-மஜ்மூஉ, கஷ்ஸாபுல் கன்னாஉ).

அடுத்ததாக இஸ்லாமிய பிக்ஹின் அடிப்படையான உஸூலானது ''ஒரு கியாசின் அடிப்படையில் (அஸ்ல்) இருந்தே தவிர பர்உ வில் இருந்து சட்டங்கள் பெறப்பட முடியாது'' (வஹ்பதுஸ் ஸுஹைலி,2006) என கூறுகின்றது. கியாசின் அடிப்படையில் தற்கால நாணயத் தாள்களுக்கு தங்கம், வெள்ளி நாணயங்களின் அனைத்து விதமான சட்டங்களும் வழங்கப்பட வேண்டும் என வாதிடுபவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்தில் தங்க நாணயம் பல நாடுகளிலும் பலவாறான அளவு, நிறைகளில் வித்தியாசங்களோடு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன. அவ்வாறு காணப்பட்ட போதும் அந்த நாணயங்கள் அனைத்தும் தங்கம் எனும் ஒரு வகையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்ததே தவிர, ஒவ்வொரு நாணயமும் தனித்தனி வகைகளாக பார்க்கப்படவில்லை. எனவே அந்த சட்டமும் தற்கால நாணயத்தாள்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதனடிப்படையில் வெவ்வேறு நாணயத்தாள்கள் வெவ்வேறு பெருமதிகளைக் கொண்டதாகவும், வெவ்வேறு அரசினால் அச்சடிக்கப்பட்டதாகவும் காணப்பட்டாலும் அவை அனைத்துமே ''நாணயத்தாள்கள்'' எனும் ஒருவகையையே குறித்து நிற்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அப்போதுதான் கியாஸின் அடிப்படையில் தங்கத்திற்கான அல்லது வெள்ளிக்கான பூர்தியான சட்டங்களை இந்த நாணயத்தாள்களுக்கும் வழங்கியதாக அமையும்.

மேலும் நாணயத்தாள்கள் ஒரு வியாபார பொருளைப் போன்று கையாளப்படுவது பல நடைமுறை சிக்கல்களுக்கு வழிவகுக்கும். உதாரணமாக ஒருவர் ஒரு நாணயத்தை கொள்வனவு செய்யும்போது கொள்வனவு செய்யப்படும் அந்த நாணயம் அதனுடைய ''அல்-தமனிய்யா'' எனும் இல்லத்தை இழப்பதுடன் அது ஒரு வியாபார பண்டமாகவே கொள்ளப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு வகையான நாணயத் தாள்களும் வெவ்வேறு வகையாக கொள்ளப்படும்போது அவைகளுக்கு தனித்தனியான ஜகாத் உடைய நிஷாப் அடையும் போதே தவிர மாறாக ஒருவரிடம் உள்ள அனைதுவிதமான நாணயத்தாள்களின் பெறுமதியையும் சேர்த்து அது நிஷாபை அடையும் போது ஜகாத் கடமையாக அமையாது. எனவே இவ்வாறு ஒரு நிலை ஏற்படும்போது அது சமூகத்தில் மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது. (லிசானுல் அறப், அல்-மிஸ்பாஹுல் முனீர்).

நாம் மேலே கூறியவாறு நாணயத் தாள்கள் அனைத்தும் ஒரே வகையை சேர்ந்ததாக அமைந்த போதும் அவைகளின் பெறுமதிகள் வேறுபட்டதாகவே காணப்படுகின்றன. எனவே குறித்த இரு வகையான நாணயங்கள் மாற்றப்படும்போது அவைகளின் பெருமதி சமமாக இருக்க வேண்டுமே தவிர, அவைகளின் எண்ணிக்கை சமமாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகக் கொள்ளப்படாது. இது எவ்வாறு எனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்தில் தங்கம் எனும் ஒரே வகையைச் சேர்ந்த, வெவ்வேறு நாடுகளில் வேறு வேறு நிறைகளில் அச்சிடப்பட்ட தங்க நாணயங்கள் அவைகளுக்கு இடையே அதன் பெறுமதியை (அதன் நிறையை) மையமாகக்கொண்டு பரிமாறப்பட்டதைப் போலாகும், மாறாக எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் பரிமாறப்பட வில்லை. இக்கருத்து வரலாற்றில் பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். இது சம்மந்தமாக தத்துவவியல் ஞானி அரிஷ்டோடில் கூறும்போது ''பணம் பரிமாற்றத்திற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும், மாறாக வட்டியால் அதிகரிக்கக்படக்கூடாது. வட்டி என்ற சொல் பணத்தின் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுகிறது (அதாவது பணத்திலிருந்து பணத்தின் பிறப்பு), ஏனெனில் சந்ததியினர் பெற்றோரை ஒத்திருக்கிறார்கள். எனவே செல்வத்தைப் பெறுவதற்கான அனைத்து முறைகளிலும் இது மிகவும் இயற்கைக்கு மாறானது.'' (அரிஸ்டோடில்,1932)

எனவே மேற்கூறிய ஆதாரங்கள் தற்கால நாணயமாற்று நடைமுறையில் ரிபா-அல்பள்ல் காணப்படுவதை விளக்குகின்றன.

**பரிந்துரைகள்**

ஒரு நாணயத்தின் மற்றொரு நாணயத்திற்கு எதிரான கொள்வனவு மற்றும் விற்பனைக்கு ஒரே பெறுமதியை நிர்ணயம் செய்வதுடன், குறித்த சேவையை செய்யும் வங்கி, நிதி நிறுவனங்கள் தமது இலாபத்திற்காக சேவைக் கட்டணம் ஒன்றை அறவீடு செய்யும் முறையை அமுல்படுத்துவதன் மூலம் நாணயமாற்று முறையை இஸ்லாமிய அடிப்படைகளுக்கு மாற்றமில்லாமல் சீரான முறையில் செயற்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**


- சம்சுதீன் அல் - சர்ஹசீ, (1989). அல்-மப்ஸூத் தாறுல் ம.்.ரிபா,பேரூத்.
- இப்னு குதாமா ,(1997). அல் - மு.்.னீ ,தாருல் ஆலம் அல் குதுப் , துருக்கி.
- இப்னு ருஷ்த், (2004). பிதாயதுல் முஜ்தஹித் வனிஹாயதுல் முக்தசித், தர்ருல் ஹதீஸ் அல் காஹிறா, எகிப்து.
- அப்துர் றஹ்மான் அல் ஜசீரி (2003) அல் பிக்ஹு அலா மத்ஹபில் அர்பஆ தாருல் குதுப் அல் இல்மிய்யா பேரூத்.
- முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ் ,(2006). ஸஹீஹ் முஸ்லிம், தாறுத் தையிபா, சவூதி அரேபியா.
- வஹ்பதுஸ் ஸுஹைலி,(2006). அல் பிக்ஹுல் இஸ்லாமி வஅதில்லதுஹு,தாருல் பிக்ர், துருக்கி.
- அரிஸ்டோடில்,(1932).பொலிடிக்ஸ், ஹாவார்ட் பல்கலைக்கழக பதிப்பகம்,அமரிக்கா.
- றமளான் அல்பூதி.(2005). ளவாபிதுல் மஸ்லஹா. தாறுல் பிக்ர், திமிஸ்க்.
- வஹ்பதுஸ் ஸுஹைலி.(2002). அல் முஆமலாத் அல்மாலிய்யா அல் முஆசரஹ். தாறுல் பிக்ர், திமிஸ்க்.
- அல் இஸ்கன்தரீ. (N.D). ஸரூஹ பத்ஹில் கதீர். தாருல் குதுப் அல் இல்மிய்யாஹ், பேருத்.
- அல் பியூமி அஹ்மத் பின் முஹம்மத் பின் அலி.(1922). அல் மத்பஆ அல் அமீரிய்யா, எகிப்து.
- இப்னு குதாமா.(1984). அல்மு.்.னீ. தாறுல் பிக்ர், பேஷரூத்.
- இமாம் நவவி.(N.D). அல்மஜ்மூஉ. மத்பதுத் தளாமுன், எகிப்து.
- இப்னு ஹஜர் அல் ஹைதமீ. (N.D). துஹ்பதுல் முஹ்தாஜ் ஸரூஹல் மின்ஹாஜ். தாறு சாதிர், பேஷரூத்.
- அல் புஹூதி மன்ஸூர்.(1983). கஷ்ஸாபுல் கன்னாஉ. ஆலமுல் குதுப், பேருத்.
- இப்னு மன்ளூர். (1968). லிசானுல் அறப். தாறு சாதிர், பேருத்.



ISBN 978-624-5736-14-0